தமிழ் வாழ்க !

மியன்மா தமிழ்க் கல்வி வளர்ச்சி மையம்

முயற்சியில்

மியன்மா தமிழ்ப் பெருமக்கள்

மலேசியா ஜொகூர் மாநிலத் தமிழர் சங்கம்

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள்

ஒன்றிணைந்த ஏற்பாட்டில்

# மியன்மா – மலேசியா – சிங்கப்பூர் தமிழ் உறவுப்பாலம் மாநாடு (2014) சிறப்பு மலர்



தமிழால் ஒன்றிணைவோம் ;
தமிழராய் உணர்வோம் !

திருவள்ளுவராண்டு 2045,
வைகாசி 23, 24, 25 ம் நாட்கள்

2014, ஜூன் திங்கள் 6, 7, 8
யாங்கோன், மியன்மா

மியன்மா - மலேசியா - சிங்கப்பூர் தமிழ் உறவுப்பாலம் மாநாடு

MYANMAR - MALAYSIA - SINGAPORE TAMIL URAVUP PAALAM MAANADU 2014

தி.வ.2045

மொழி இனத்தின் விழி

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு ...!

# மலேசியாவில் தமிழ்க் கல்வி தோற்றமும் வளர்ச்சியும்



எஸ். குமரன்
மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலும்பூர்
skumaran.um@gmail.com

## முன்னுரை

மலேசியாவில் இந்தியச் சமுதாயம் ஒரே இனமாக அல்லது ஓர் இறுக்கமான சமுதாயக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது எனச் சொல்லிவிட இயலாது. இதில் பல துணைச் சமூக உள்ளமைப்புகள் உள்ளன. இருப்பினும் இந்தியர்களின் பொதுமொழியாகவும் தொடர்பு மொழியாகவும் தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்சமயம் மலேசியாவில் வாழும் இந்தியர்களுள் தமிழர்கள் 87.6%, தெலுங்கர் 2.45%, மலையாளிகள் 2.25%, சீக்கியர் 2.09%, பஞ்சாபியர் 1.45% சார்ந்தவர்களாக உள்ளனர். எனவே, இதனடிப்படையிலேயே இந்நாட்டு இந்தியர்களின் தாய்மொழி கற்பித்தலுக்குத் தமிழ் முதன்மை மொழியாகத் தெரிவுசெய்யப்பட்டது[1].

மலேசியாவின் கல்வித் திட்டம் பல நிலைகளைக் கொண்டுள்ளது. அவை, தொடக்கக் கல்வி, இடைநிலைக்கல்வி, தொழிற்கல்வி, மேல்நிலைக்கல்வி ஆகியனவாகும். தமிழ்க் கல்வியை ஆராயமுற்படும்போது தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையில் ஆராய்வதே முழுமையானதாகும். மலேசியாவில் கல்வி வாய்ப்பானது நாட்டின் முன்னேற்றத்துடன் இணைந்தே அமைந்துள்ளது எனலாம். மலேசியத் தமிழ்க் கல்வியின் வயது 200 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது. மலேசிய இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் தாய்மொழிக் கல்வியைப் பெற்றதன்மூலம் தமிழ்ப் பண்பாட்டையும் மரபையும் நிலைநாட்ட வாய்ப்பாக அமைந்தது.

இக்கட்டுரை, மலேசியத் தமிழர்களின் தொடக்ககால வரலாற்றினை மீள்பார்வை செய்வதோடு தமிழர்களின் முன்னேற்றத்தையும், தாய்மொழிக் கல்வியான தமிழ்க் கல்வியின் அவசியத்தையும் ஆராய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. தொடக்கக் கல்வி தொடங்கி பல்கலைக்கழகப் பட்டக்கல்வி வரையிலான தமிழ்க் கல்வியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்கும் வண்ணமாக அமைந்துள்ளது.